


**12.03.2025**

**தலைப்புசெய்திகள்**

1. நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பின்தங்கிய பிரிவினரின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவும் மொரீஷியஸும் மேம்படுத்தப்பட்ட நட்புறவு நாடுகளாக திகழ்கின்றன என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. தேசிய கல்வி கொள்கை மூலம் பிராந்திய மொழிகள் ஊக்குவிக்கப்படுவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

4. கோவை, நீலகிரி, ஈரோடு திருப்பூர் திண்டுக்கல் தேனி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. All England Open badminton சேம்பியன் பட்ட போட்டியின் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் பி.வி.சிந்து – தென்கொரியாவின் **Kim-**ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

**********

**குடியரசுதலைவர்**

நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பின்தங்கிய பிரிவினரின் வாழ்வாதாரம் மேம்படுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

சண்டிகட் பஞ்சாப் பல்கலைகழகத்தின் 72ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர் வளர்ச்சி அடைந்த பாரதம் இலக்கை முன்னிறுத்தி தேசிய கல்வி கொள்கையின் அம்சங்கள் இப்பல்கலைகழகத்தில் நடைமுறைபடுத்தப்படுவதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

கல்வி மற்றும் தொழிற்சாலைகளின் ஒருங்கிணைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களை மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக கற்றறிய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

**********

பிரதமர் - மொரீஷியஸ்

சமூக பொருளாதார வளர்ச்சி பாதையில் இந்தியாவும் மொரீஷியஸும் நட்புறவு நாடுகளாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மொரீஷியஸ் போர்ட் லூயீயில், அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டங்களில் இன்று உரையாற்றிய பிரதமர், இருநாடுகளின் நட்புறவிற்கு மேம்படுத்தப்பட்ட நிலைப்பாடுகள் கொண்ட நட்புறவு என்ற அந்தஸ்தை மொரீஷியஸ் பிரதமருடன் இணைந்து தாம் வழங்குவதாக குறிப்பிட்டார்.

மொரீஷியஸ் நாட்டில் அமைய உள்ள புதிய நாடாளுமன்ற வளாகத்திற்கு இந்தியா தனது பரிசாக உரிய ஒத்துழைப்பை வழங்கும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

இந்திய பெருங்கடல் வாயிலாக மட்டுமல்லாமல் கலாச்சாரம் மற்றும் பண்புகளாலும் இருநாடுகளும் பிணைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

இந்திய நாட்டின் 140 கோடி மக்களின் சார்பாக மொரீஷியல் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக கூறிய பிரதமர் இத்தினத்தில் பங்கேற்க தமக்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

இந்நிகழ்வில் பேசிய மொரீஷியஸ் பிரதமர் திரு.நவீன் சந்திர ராம்கூலம் பிரதமர் திரு.நரேந்திரமோடியின் பங்கேற்பால், அந்நாட்டின் தேசிய தினம் பெருமை அடைவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக இருதலைவர்கள் இடையே நடைபெற்ற பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகள் அடிப்படையில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இரு பிரதமர்களும் இணைந்து சுகாதார மையம் உட்பட 20 சமுதாய மேம்பாட்டு திட்டங்களை காணொலி வாயிலாக துவக்கிவைத்தனர்.

**********

பிரதமர் - தண்டியாத்திரை

சுதந்திர போராட்டத்தின் வரலாற்று சிறப்பு மிகு தண்டி யாத்திரை தொடங்கிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1930ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் அஹமதாபாத் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தொடங்கிய இந்த யாத்திரை, ஏப்ரல் 6ஆம் தேதி தண்டியில் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

தண்டியாத்திரையில் பங்கேற்ற தியாகிகள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

சுய சார்பு மற்றும் விடுதலை வேட்கைக்கான இத்தேசிய இயக்கம் மக்களிடையே ஒரு எழுச்சியை தோற்றுவித்ததாகவும் அவர் கூறினார்.

இதில் பங்கேற்றவர்களின் துணிச்சல் தியாகம் அர்ப்பணிப்பு, அகிம்சை போன்றவை வரும் தலைமுறையினருக்கு என்றென்றும் உத்வேகமாக திகழும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

**********

**மக்களவை - அஷ்விணி வைஷ்ணவ்**

ஹோலி பண்டிகை மற்றும் கோடை விடுமுறையை ஒட்டி சென்ற ஆண்டு 13 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்துபூர்வமாக இன்று அவர் அளித்த பதிலில் தீபாவளி மற்றும் நவராத்திரி விழாவை ஒட்டி சென்ற அக்டோபர் மாதம் 8 ஆயிரம் சிறப்பு ரயில் சேவைகள் இயக்கப்பட்டதாகவும் கூறினார்.

மகா கும்ப விழாவிற்காக 17 ஆயிரத்திற்கும் அதிகமான ரயில்கள் இயக்கப்பட்டதாகவும், இதில் சராசரியாக 4 கோடியே 24 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

**********

**நாடாளுமன்றம் - தினேஷ் ஷர்மா**

தேசிய கல்வி கொள்கை மூலம் பிராந்திய மொழிகள் ஊக்குவிக்கப்படுவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு.தினேஷ் ஷர்மா வளர்ச்சி பணிகளின் தேக்க நிலையிலிருந்து கவனத்தை திசை திருப்பவே திமுக மொழி பிரச்சனையை எழுப்புவதாக குறை கூறினார்.

தமிழகத்தில் திமுகவிற்கான ஆதரவு குறைந்துள்ளதாகவும், அக்கட்சியின் மீது மக்கள் அதிருப்தியுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**********

**ஏ.பி.சிங்**

நாட்டில் தற்போது உருவாகிவரும் புவி சார்ந்த பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள திறன்வளர்ச்சியின் அவசியத்தை விமான படை தலைமை தளபதி ஏர்.சீ.ஃப் மார்ஷல் ஏ.பி.சிங் வலியுறுத்தியுள்ளார்.

வெலிங்டனில் அமைந்துள்ள பாதுகாப்பு ராணுவ பயிற்சி கல்லூரியில் பயிற்சி மாணாக்கரிடையே உரையாற்றிய அவர் மாற்றங்களை எதிர்கொண்டு அச்சுறுத்தல்களை ஆராய்ந்து அதற்கேற்ற நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

முப்படைகளின் ஒருங்கிணைந்த பயிற்சிகளோடு, செயல்பாட்டு திட்டங்களில் இணைந்து செயலாற்றுவது சவால்களை வலிமையுடன் எதிர்கொள்ள வழிகோலும் என்றார்.

இந்திய விமான படையினர் நவீன திறன்மேம்பாட்டு யுக்திகளுடன், புதிய தொழில்நுட்ப தளவாடங்களின் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**********

**கடற்படை**

ராணுவ படையினர் தொடர்பான விழிப்புணர்வை இளைஞர்களிடையே ஏற்படுத்தும் வகையில் இந்திய கடற்படை ஊழியர்களின் கார் விழிப்புணர்வு பயணம் இன்று பிற்பகல் சென்னை வந்தடைகிறது.

INS அடையார் கடற்படை தளம் சார்பில் சென்னை நேப்பியார் பாலம் அருகே கடற்படையினருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

கடந்த மூன்றாம் தேதி கொல்கத்தா மற்றும் விசாகபட்டிணத்திலிருந்து இந்த விழிப்புணர்வு கடற்படை கார் பயணம் தொடங்கியது.

**********

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு மேலடுக்கு சுழற்சி காரணமாக கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, ஈரோடு திருப்பூர் திண்டுக்கல் தேனி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு சில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள் மன்னார்வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

**நெல்லை மழை**

நெல்லை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் கன மழை காரணமாக பாபநாசம் அகஸ்தியர் அருவி மணிமுத்தாறு அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**அமைச்சர்கள்**

**மதுரை மாவட்டம் மத்திய சட்டமன்ற தொகுதியில்** அரசின் நல திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் மாநில தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை இன்று பெற்றுக்கொண்டார்.

**கருப்பாவூரணி ஊராட்சியில் அங்கன்வாடி** மையத்தை மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி தொடங்கிவைத்தார்.

**********

**சந்திரசேகர் - சிறுபான்மையினர்**

பிரதமரின் சிறுபான்மையினர் மேம்பாட்டு திட்டத்தின் செயலாக்கம் மற்றும் முன்னேற்றம் குறித்து இத்துறைக்கான மத்திய செயலர் டாக்டர் சந்திரசேகர் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நாட்டின் பல்வேறு மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள், மத்திய அரசின் அமைப்புகளில் இந்த திட்டத்தின் செயலாக்கம் குறித்து இதில் ஆராயப்பட்டது.

இந்த திட்டத்தின் நடைமுறைகள், நிதி நிலைமை, சவால்கள் ஆகியவை குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

சிறுபான்மையினர் நல திட்டங்களை முன்னெடுத்து செல்வதில் மத்திய மாநில அரசுகளின் ஒத்துழைப்பு குறித்து இந்த ஆய்வு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேலும் பிரதமரின் சிறுபான்மையின மேம்பாட்டு திட்டம் சிறுபான்மையினர் அதிகம் உள்ள பகுதிகளில் முறையாக செயல்படுத்துவது உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளும் விவாதிக்கப்பட்டன.

**********

**தர்மபுரி**

தர்மபுரியில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து ஆட்சித்தலைவர் எடுத்துரைக்கையில்

**வாய்ஸ்**

**********

**ஆர்பாட்டம்**

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஐயாயிரத்து 500 ரூபாய் விலை அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலூர் மாவட்டம் காட்பாடி அம்முண்டியில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் இன்று ஆர்பாட்டம் நடைபெற்றது.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தியை தொடங்க வேண்டும்,

வெட்டுக்கூலியை முத்தரப்பு கூட்டம் நடத்தி முறைப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட ஏராளமான கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் இந்த ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**********

**அக்னி வீரர்**

அக்னி வீரர் தொழில்நுட்ப பிரிவுகளில் பல்வேறு பணிகளில் ஆள்சேர்ப்புக்கான பதிவு தற்போது இணையதளம் வாயிலாக தொடங்கி உள்ள நிலையில் அடுத்த மாதம் 10ஆம் தேதிவரை இதற்கு விண்ணப்பிக்கலாம்.

திருச்சி, கரூர் பெரம்பலூர், அரியலூர், தஞ்சை திருவாரூர் நாகை காரைக்கால் உள்ளிட்ட 16 மாவட்டங்களை சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்கலாம்.

joinindianarmy.nic.in என்ற ராணுவ இணையதளத்தின் மூலம் **அக்னிவேர் ட்ரேட்ஸ் மேன்** 10 மற்றும் 8ஆவது பிரிவுகளில் ஆன்லைனில் பதிவு செய்யலாம்.

**********

**அண்ணாமலை**

தமிழகத்தில் மதுபான முறைகேடுகளை மறைக்கவே திமுக மும்மொழி பிரச்சனையை எழுப்புவதாக பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் திமுக ஆட்சியில் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மதுபான ஊழல் நடைபெற்றிருப்பதாக அவர் குறை கூறியுள்ளார்.

நெல் கொள்முதலில் தமிழகத்தில் அதிக அளவில் ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் திரு.அண்ணாமலை குறிப்பிட்டார்.

**********

**கோவில்**

திருவாரூர் வடுவூர் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோவில் மாசி மக தீர்த்தவாரி இன்று விமரிசையாக நடைபெற்றது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**கடத்தல்**

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூர் அருகே தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை கடத்தி வந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

36 மூட்டைகள் குட்கா பறிமுதல் செய்யப்பட்டது.

**********

**இருவரி**

**நாமக்கல்லில் கவிஞர் வே.ராமலிங்கம் அரசு** மகளிர் கலை கல்லூரியில் மத்திய இளைஞர் நல அமைச்சகத்தின் சார்பில் நேரு யுவகேந்திரா அமைப்பின் கீழ் “எனது இளைய பாரதம், உலக சமூக நீதி நாள்” விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் இன்று பங்கேற்றுள்ளனர்.

**பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டம்** மாவிலங்கை கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

**மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டார** வளர்ச்சி அலுவலகத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

25க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள காலியிடங்களுக்கு 500க்கும் மேற்பட்டோர் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

18 முதல் 35 வயதிற்குட்பட்டோர் உரிய விவரங்களுடன் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

**திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும்** தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் வரும் வெள்ளிக்கிழமை தொடங்க உள்ள TNPSC குரூப்-1 தேர்வுக்கான சிறப்பு இலவச பயிற்சி வகுப்புகளில் தகுதியுடையோர் பங்கேற்று பயன்பெறலாம்.

**********

**கச்சதீவு**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நாளை மறுநாள் நடைபெறுகிறது.

நம் நாட்டிலிருந்து 3 ஆயிரத்து 464 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

இந்த பயணத்திற்கான கடல் தன்மையை மீன்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

கடல் பயணத்திற்காக நாட்டு படகுகளும், இழுவை படகுகளும் தயார்நிலையில் உள்ளன.

அனைத்து முன்னேற்பாடுகளையும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத்சிங் காலோன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

**********

**பேட்மிண்டன்**

பர்மிங்ஹாமில் All England Open badminton சேம்பியன் பட்ட போட்டியில் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் பி.வி.சிந்து – தென்கொரியாவின் **Kim**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை – டென்மார்க் இணையுடன் மோதுகிறது,

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**